பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 04 திங்கட்கிழமை (15-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 77

# கடற்படைக்கு ரூ.36 கோடிக்கு 2 நவீன அதிவேகப் படகுகள்

## பிரான்ஸிலிருந்து கிடைக்கும் அதிகாரிகள் குழு நேற்றுப் புறப்பாடு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

36 கோடி ரூபா பெறுமதியான — பிரான்ஸ் நாட்டுத் தயாரிப்பான — இரு அதிவேகப் படகுகள் விரைவில் ஸ்ரீலங்கா கடற்படையில் சேர்க்கப்படவுள்ளன.

இவ்விரு விசைப்படகுகளையும் பார்வையிடவும் — அது தொடர்பான பயிற்சிகளைப் பெறவும் இரு பொறியியல் நிபுணர்கள் உட்பட 16 பேர் கொண்ட குழு ஒன்று நேற்று கொழும்பில் இருந்து பிரான்ஸுக்குப் புறப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விரு அதிவேகப் படகுகளும் எதிர்வரும் ஆகஸ்ட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராத்திரி முதல் யுத்த நிறுத்தம் செய்ய இந்துப் பேரவை கோரிக்கை

### 4 வாரங்களுக்கு அவசர இலவச உணவும் வழங்குக!

யாழ்ப்பாணம், பெப். 15

இந்து மக்களின் புனித நாளான சிவராத்திரி தினத்தில் — இம்மாதம் 19ஆம் திகதியில்—இருந்து யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதன் மூலம் அநாவசியமான உயிரிழப்புகளையும் அழிவையும் தடுக்குமாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கேட்டுள்ளது.

இந்துசமயப் பேரவைச் செயற்குழுக் கூட்டம் நேற்று, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் உள்ள அதன் அலுவலகத்தில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இராணுவத் தீர்வின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென ஜனாதிபதியும் மற்றும் அரசியல் தலைவர்களும், மதத்தலைவர்களும் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளதால் அர்த்தமற்ற இப்போரை நிறுத்தவேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டத்தில் நிறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொது விவாதம் நடத்துவதற்கு பிரேமா பதவி விலகவேண்டும்

### சிறிமா விதிக்கும் நிபந்தனை இது

கொழும்பு, பெப். 15

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை குறித்து பொது விவாதத்தில் கலந்துகொள்ள நான் சம்மதிக்க வேண்டும் என்றால், முதலில் ஜனாதிபதி பிரேமதாஸா பதவி விலக வேண்டும்.

எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் முன்கண்ட நிபந்தனையை விதித்துள்ளார்.

தேசிய பிரச்சினைகள் குறித்த பொது விவாதத்துக்கு இடமளிக்கும் வகையில் திரு. பிரேமதாஸா பதவிவிலகுவதுடன், சுதந்திரமான தேர்தலை நடத்த இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும் என்றும் திருமதி பண்டாரநாயக்கா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பொறுப்பற்ற பொருளாதாரத் திட்டங்கள், வடக்கு-கிழக்கு பிரச்சினையில் பிரேமதாஸாவின் அணுகுமுறை,

[5ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய அரசியலில் திருப்பம் ஏற்படலாம்

## தமிழக காங்கிரஸ் தலைவர்கள் ராவை சந்திக்க டில்லி விரைவு

சென்னை, பெப் 15

தமிழகத்தின் காங்கிரஸ் தலைவரான வாழப்பாடி இராமமூர்த்தியும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தமிழக எதிர்க் கட்சித் தலைவரான எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் நேற்றுக் காலை புதுடில்லிக்கு புறப்பட்டுச் சென்றனர்.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவை அவசரமாகச் சந்திப்பதற்காகக் கட்சித் தலைமைப் பீடத்திலிருந்து வந்த அழைப்பை அடுத்தே அவர்கள் இருவரும் புதுடில்லிக்கு விரைந்தனர்.

இவர்களது சந்திப்பை அடுத்து தமிழக அரசியல் நிலைமைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைமைகள் குறித்து தமிழகத் தலைவர்கள் இருவரும் பிரதமருக்கு விரிவாக எடுத்துக் கூறுவர் என்றும் —

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணியினால் இனிபிரயோசனம் ஏதும் ஏற்படப் போவதில்லை என்பதை அவர்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### புதுடில்லியில் பிரதமருடன் மூப்பனாரும் முக்கிய பேச்சு

புதுடில்லி, பெப். 15

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ஜி. கே. மூப்பனார் நேற்று முன்தினம் பம்பாய் செல்லும் வழியில், புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசினார்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை குறித்து அவர் பிரதமருடன் முக்கிய பேச்சுக்கள் நடத்தி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

(ஒ-த)

## கேணல் கிட்டுவின் நினைவு நாள்

யாழ்ப்பாணம், பெப். 15

இந்திய சதிவலையில் சிக்கி வங்கக் கடலில் காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் போராளிகளது 31 ஆம் நாள் நினைவு தினம் இன்றாகும்.

இதனையொட்டி கேணல் கிட்டுவின் பிறந்த மண்ணில்— வல்வெட்டித்துறையில் — அவரது இல்லத்தில் சமய நிகழ்ச்சிகளும், மதிய போசன வைபவமும் இடம்பெறும். (ஒ-5)

## அளவெட்டியில் படையினர் சூடு!

தெல்லிப்பழை, பெப் 15

அளவெட்டிப் பகுதிக்குச் சென்ற மக்கள், படையினரின் சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்களை அடுத்து திரும்பி ஓடி வந்தனர்.

அளவெட்டியில் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிக்கு அருகிலுள்ள வீடுகள், தோட்டங்களுக்கு அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி சென்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-68)

## பெண் காயம்

யாழ்ப்பாணம், பெப். 15

அம்பனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றிரவு 7.30 மணியளவில் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அளவெட்டியில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

அளவெட்டி தெற்கு சூசையப்பர் கோவிலடியில் உள்ள வீட்டு வாசலில் நின்றிருந்த பரராஜசிங்கம் லலிதா (வயது 22 என்பவரே காலில் படுகாயமடைந்தார்.

சங்கானை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர் பின் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார். (ஒ-5)

## முச்சந்தி முரளி



அப்ப ... அம்மணி - ஐயா கூட்டணிக்கு அரோகரா [illegible]கோ......!!

## இளாலிப் பகுதியில் ஷெல்! நான்கு பேர் படுகாயம்!!

### கடற்படையினர் பீரங்கி தாக்கு

யாழ்ப்பாணம், பெப் 15

ஆனையிறவுப் பக்கமாக இருந்து நேற்று இரவு 7.45 மணியளவில் இளாலி நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. அடுத்தடுத்து இரு ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

ஒரு குண்டு இளாலி சம்மிக்கலார் ஆலயத்துக்குச் சமீபமாக உள்ள ஒரு வீட்டுக்கு அருகில் விழுந்து வெடித்தது. அப்போது வீட்டுக்கு முன்னால் கூடி கதைத்துக்கொண்டிருந்த நால்வர் படுகாயமடைந்தனர். அவர்களில் இருவர் தம்பதியர்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர்.

இதேசமயம்—

நேற்று மாலை 5 மணி தொடக்கம் இளாலிக் கடற்பரப்பில் இருந்து கடற்படையினர் பலத்த பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். சேத விவரம் தெரியவரவில்லை

கடற்பரப்பில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் இடம்பெற்றதாக மற்றொரு செய்தி தெரிவித்தது

மாதகலில் இருந்து இடம்பெயர்ந்து இளாலியில் வசிக்கும் இளாலி மாதா கோவில் பாடசாலை மாணவியான சேவியர் அமலநாயகி (வயது 14). இளாலியைச் சேர்ந்த மிக்கைல் சூசைமுத்து (வயது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரணியின் போராட்டம்:

## 10 லட்சம் தபாலட்டைகள் ஜனாதிபதி பிரேமாவுக்கு!

கொழும்பு, பெப். 15

பத்து லட்சம் தபாலட்டைகளை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பி வைக்கும் நூதனப் போராட்டம் ஒன்றை எதிர்க் கட்சிகள் விரைவில் ஆரம்பிக்கவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாட்டில் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து —

பத்திரிகைச் சுதந்திரம் பறிபோகின்றமை —

விரைவாக உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவு —

பல்கலைக் கழகங்களில் நிலவும் குழப்ப நிலை —

வேலையில்லாத் திண்டாட்டம் —

இலவசக் கல்வி முறைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து —

ஆகியவை குறித்து ஜனாதிபதிக்கு நேரடியாகத் தெரிவிப்பதற்கே இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக எதிர்க்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ-6)

## குமண நேற்று திருமலைக்கு; நாளை மீண்டும் வரும்

### அன்றே நோயாளருடன் திரும்பும்

பருத்தித்துறையில் இருந்து நேற்று மாலை ''குமண'' கப்பல் அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்களை ஏற்றிக் கொண்டு திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

அங்கிருந்து மீண்டும் ''குமண'' நாளை செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும். அதில் கொழும்பில் சிகிச்சை பெறச் சென்றவர்கள் வந்து சேருவர். அன்றைய தினமே ''குமண'' கப்பல் இங்கிருந்து முதற் தொகுதி நோயாளர்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டுச் செல்லும்.

அது மீண்டும் எதிர்வரும் 18 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து அடுத்த தொகுதி நோயாளர்களுடன் அன்றே திரும்பிச் செல்லும்.

குறிப்பிட்ட இரு தினங்களிலும் செல்ல ஏற்பாடாகி இருக்கும் நோயாளர்கள், அந்தந்தத் தினங்களில் காலை 7 மணிக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து சேருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-15-87)

## உணவுப் பொருள்களுடன் 'குமாரி' நேற்றுப் புறப்பாடு

### கூடுதலளவு அரிசி வந்து சேரும்

யாழ்ப்பாணம், பெப். 15

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமாரி' கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தில் இருந்து வடக்கு நோக்கி புறப்பட்டு விட்டதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக யாழ். அரச அதிபர் நேற்று மாலை தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் அதிகளவில் அரிசி எடுத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச அதிபர் கூடுதலான அளவு அரிசியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக் கேட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-5)

**உளவாளிகள்!!!**

**அவதானமாக இருக்கவும்!**

**கண்ட இடங்களில் கூடி நின்று இரகசியம் கதையாதீர்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபை விதித்த வரி உயர்வுக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ். மாநகரசபை வரி மூன்று மடங்கு உயர்த்தப்பட்டிருப்பதை ஆட்சேபிக்கும் தீர்மானம் ஒன்றை யாழ் மாநகரசபை வரியிறுப்பாளர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

நேற்று முற்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் தலைவர் சி நாகரசா தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மூன்று மடங்கு வரியை அதிகரித்திருப்பது உள்ளூராட்சி வரிமதிப்பு சட்டங்களுக்கு முரணானது என்றும் —

இன்றைய போர்ச் சூழ்நிலையில் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மேற்படி தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# இலங்கையை பிரிக்கும் முயற்சியில் "கண்ணுக்குத் தெரியாதகரங்கள்!"

## அமெரிக்கப் பிரமுகர் கருத்து

கொழும்பு, பெப். 15
இலங்கையைப் பிரிக்கும் முயற்சியில் ''கண்ணுக்குத் தெரியாத கரங்கள்'' (Unseen hands) செயல்படுகின்றன.

அமெரிக்காவின் சர்வதேச விவகார நிபுணர்களில் ஒருவரும், கறுப்பு இன வழக்கறிஞருமான டாக்டர் காலித் அப்துல்லா தாரிக் அல் மன்சூர் கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

மேற்குலகம் தமது ஏகாதிபத்திய மனோபாவம் மற்றும் இன ரீதியான தப்பெண்ணம் ஆகியவற்றில் இருந்து இன்னும் மீளவில்லை. எம்மில் பலருக்கு இன்னும் குடியேற்ற காலத்து மனோபாவமே உள்ளது.

மேற்குலகம் செய்வது சரியானது என்றே நம்மில் பலர் நம்புகின்றனர். மேற்குலக நாட்டினர் தான் நமது இரட்சகர்கள் என்று நினைக்கின்றோம். கஷ்டங்களின் போது மேற்குலகம் எம்மைக் காப்பாற்றும் என்று எண்ணுகின்றோம். இது முட்டாள்தனமானது. தரங்குறைந்தவர்களாகவே மூன்றாம் உலக நாடுகளை மேற்கு நாடுகள் பார்க்கின்றன

வெள்ளை நிற மேலாதிக்கம் தான் மேற்குலகத்தில் உள்ளது. வெள்ளை இனத்தவரல்லாத ஈராக், சோமாலியா, பனாமா, கிரனேடா, ஆகிய நாடுகளில் அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புக் கொள்கையை அமுல் நடத்தியது. அந்நாடுகள் வெள்ளை நிறத்தவரல்லாதவர்களுடையவை என்பதே அதற்குக் காரணம்.

இஸ்ரவேல் மற்றும் செர்பியா ஆகிய நாடுகள் என்று வரும் போது தமது பலத்தைக் காட்ட மேற்குலகம் தயங்குகின்றது. அதற்குக் காரணம் அவை வெள்ளை நிறத்தவர் வாழும் நாடுகள் என்பதே.

இலங்கையைப் பிரிப்பதற்கான முயற்சியில் ''கண்ணுக்குத் தெரியாத கரங்கள்'' செயல்படுகின்றன — என்றும் டாக்டர் அல் மன்சூர் தெரிவித்தார்.

டாக்டர் அல் மன்சூர் இலங்கை பற்றித் தெரிவித்த எச்சரிக்கையை இலங்கையில் உள்ள தேசப்பற்றுமிக்கவர்கள் பாரதூரமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ''சண்டே ஒப்சேர்வர்'' வார இதழில் அரசியல் விமர்சகர் அனுருத்த திலகசிறி தெரிவித்துள்ளார்.


டாக்டர் அல் மன்சூரின் கூற்றுக்களை ஆத்திரம் கொண்ட கறுப்பு இனத்தவர் ஒருவரினுடையது என்று நிராகரித்துவிட முடியாது என்றும் திரு. திலகசிறி கூறியுள்ளார். டாக்டர் மன்சூர் அமெரிக்காவில் நன்மதிப்புப்பெற்ற பிரபல கல்விமான் என்றும் அவர் தெரிவுத்துள்ளார். (ஒ-எ)

# கப்பலில் வந்த பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சமாசத்தால் ''குமண'' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களும் அல்கதீன் பைப், கால்நடைத் தீனி, தட்டச்சு இயந்திரம் ஆகியவையும் விரைவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் என சமாச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

''குமண'' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட மாவு, சீனி முதலிய ஏனைய பொருள்கள் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ப. நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (க)

உ



ஏழாலை வந்துதித்த

## அவதாரநாயகி அன்புத்தாய் பிறந்ததினம் காண்கிறாள்

ஓரேழு வயதிலே வசந்த நாகபூஷணி அம்மனால் ஆட்கொள்ளப்பட்டு அவதார நாயகியாக இருந்து பல்லாயிரம் மக்களுக்கு வாழ்வளித்த வசந்தகுமாரியாம் அன்புத் தாயாகிய அவதாரநாயகி **16 - 02 - 1993** செவ்வாய்க்கிழமை மாசித்திங்கள் 5ஆம் நாள் களபாவோடை வசந்தபுரப் பகுதியில் தனது 33ஆவது பிறந்த தினத்தை அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க விமர்சையாகக் கொண்டாடுகிறாள்.

செந்தண்மை பூண்டொழுகும் அந்தணப் பெருந்தகை 'சிவஞான பாஸ்கரன்' சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்களும் அவரது இணுவில் தர்மசாஸ்தா குருகுல மாணவர்களும் வேதமோதி ஆசீர்வதிக்க கீழ்வருவோர் அருளுரை கூறி வாழ்த்துகிறார்கள்.

தலைவர் : சிவத்திரு வ. குமாரசாமி ஐயா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 2 ஆவது குருமகா சந்நிதானம் சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்

நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணியசாஸ்திரிகள்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

கானகதாவாருதி சிவ வை நித்தியானந்தசர்மா

முத்தமிழரசி செல்வி புஷ்பா செல்வநாயகம் (B.A.Hons)

வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன்
(விரிவுரையாளர், சமூக மருந்துத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

திரு. மா. வேதநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

திரு. க. அருந்தவராசா தம்பதிகள்
(ஆணையாளர், வலி வடக்கு புனித பரியோவான் முதலுதவிப் படை, தலைவர், வலி வடக்கு செஞ்சிலுவைச் சங்கம்)

அன்னைதாசன் ஆனந்தராசா
(ஆசிரியர், சைவத்தமிழ் ம. வி. உரும்பராய்)

காலை 7 00 மணிக்கு வசந்த நாகபூஷணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி சொற்பொழிவு, ஆசியுரை என்பன நடைபெற்று அவதாரநாயகியால் அரவணைக்கப்படும் சிறார்களுக்கும், முதியோருக்கும் அன்பளிப்பு வழங்கி நண்பகல் 12-00 மணிக்கு வீதி உலாவும், அன்னதானமும் இடம்பெறும்.

விசேட நிகழ்ச்சி :

மாலை 3 00 மணி
''இந்த மண் எங்களின் சொந்த மண்'' புகழ்

**ஜீ. சாந்தன் குழுவினரின்**

பக்திப் பாடல்கள்.

அன்னையால் நியமிக்கப்பட்ட அன்புத் தொண்டர்கள் புனித பரியோவான் படையினருடன் இணைந்து கடமையாற்றுவார்கள்.

ஓம் சக்தி

இங்ஙனம்
மாணிக்கவாசகர் - நித்தியானந்தம்

களபாவோடை,
ஏழாலை. 14-2 1993 [சி/4512]

# எமது கலைகளை பாதுகாக்க நாம் முயற்சிக்க வேண்டும்

## இசை விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 15
சிங்களக் கலைஞர்களுக்கு வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் அரசு எமது கலைஞர்களைப் புறக்கணிக்கின்றது இதை உணர்ந்து எமது கலைகளைப் பாதுகாக்க நாம் முயலவேண்டும்.

இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா இரண்டாம்நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும் போது யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் இவ்வாறு சொன்னார்.

டாக்டர் ரி. கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது;

தெய்வாம்சம் பொருந்திய கலைகள் மனித நேயத்தை உருவாக்கிச் சிறப்பான வாழ்வுக்கு வழி கோலும் என்றார்.

வேலணை ப நோ. கூ. சங்கத்தின் ஆதரவில் இடம்பெற்ற அன்றைய நிகழ்வில் மேற்படி ப நோ. கூ. சங்கத்தின் தலைவர் திரு. பொ. மாசிலாமணி மற்றும் திரு. க. நந்தகுமாரன், திரு. சி. சோமதாஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

முத்தமிழின் தலைமைக்கு பெரிதும் உரியது இயலா? இசையா? நாடகமா? என்ற தலைப்பிலான பட்டிமண்டபம் நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த-111)

# அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

## 1993ஆம் ஆண்டிற்கான திருத்துநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுக்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் திருத்தல் செவ்வை பார்த்தல் வேலைகள் செய்யக் கூடியவர்களிடம் இருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தட்டச்சு இயந்திரம்.
2. றோணியோ இயந்திரம்.
3. ஒளிப்படப்படியெடு கருவி.

### விண்ணப்பித்தல்

மேற்படி திருத்துநர்களைப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர், உரிய விண்ணப்பப்படிவத்தை கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 04-03-1993 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம். கடித இடது பக்க மூலையில் இயந்திரங்கள் திருத்தலும், செவ்வை பார்த்தலும் எனப் போடப்படல் வேண்டும்.

1993ஆம் ஆண்டிற்கு தேவையான திருத்தல் செவ்வை பார்த்தல் வேலைகள் செய்யப்படும் போது கேள்விகள், பதிவு செய்யப்பட்ட திருத்துநர்களிடம் இருந்து மட்டும் கோரப்படும்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்,

சுகாதார சேவைகள் பிராந்திய-
பணிப்பாளர் பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
11-02-1993 (சி-4527)

# கண்ணீர் அஞ்சலி

பலாலி ஆசிரிய கலாசாலை
வர்த்தகநெறி விரிவுரையாளர்
செல்வி
**வேலுப்பிள்ளை நாகரத்தினம்**
அவர்களின் அருமைத் தாயார்
**திருமதி வள்ளியம்மை வேலுப்பிள்ளை**
அவர்களின் மறைவு குறித்து
அன்னாருக்கு
**எமது கண்ணீர் அஞ்சலி**

வணிக மன்றத்தினர்
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.
(24450)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



## கடற்புலி கப்டன் ஜீவா

( நடராஜா மார்க் ஜெயராஜ் )

பிறப்பு : 1969 — 08 — 23
வீரச்சாவு : 1993 — 01 — 16

ஆண்பிள்ளை எனச்சொல்ல
அம்மாவிற்கு செல்லப்பிள்ளையாய்
நான்கு பெண்களுக்கு ஆசைச்
சகோதரனாய்
வீட்டிற்கு ராஜாவாய்
நாட்டிற்கு கப்டன்ஜீவா எனப்பெயரும் பெற்றாய்
வங்கக் கடலில் வந்த உங்களுக்கு
சதிவலை தந்தானே இந்தியன்
நீர் சாவினை வென்று சரித்திரம் படைத்தீரோ
வேங்கையாகி இரண்டாண்டு ஆகும்முன்
மாவீரர் ஆனாய் — ஆனால்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் — எம்
மனதில் நின்று நீங்காய்.

உன் பிரிவால் துயருறும்
தாய், சகோதரிகள்

53/12, புது வீதி,
பாஷையூர்.
(24454)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பில் இயங்கும்

# சிக்கனக் கடன் சங்க நிதி ரூபா $8\frac{1}{2}$ லட்சம் கையாடல்!

யாழ்ப்பாணம், பெப். 15

கொழும்பில் இயங்கும் இலங்கைக் கல்வி உத்தியோகத்தர்கள் சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கத்தின் நிதியிலிருந்து 8 லட்சத்து 47ஆயிரம் ரூபா கையாடப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சங்கத்தின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாக சபையைச் சேர்ந்த ஒன்பது பேரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பகுதியினர் நடத்திய விசாரணைகளில் இருந்தும் கூட்டுறவுத் துறையினர் நடத்திய விசாரணைகளில் இருந்தும் நிர்வாக சபையினரே நிதியை கையாடியதாகத் தெரியவந்துள்ளதாம்.

சம்பந்தப்பட்ட ஒன்பது பேரும் இடைநிறுத்தப்பட்டு நிர்வாகம் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. இதற்கு எதிராக மேன்முறையீட்டு மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நிர்வாகத்தை அதிகாரியிடம் கையளித்தது நியாயமற்றது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பினை ஆட்சேபித்து இப்போது உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் சங்கத்தின் அலுவல்கள் வழமையாக நடந்து வருவதாகவும், யாழ். மாவட்ட அங்கத்தவர்கள் எவ்வித கவலையும் கொள்ளத் தேவையில்லை என்று யாழ். பிரதேசப் பிரதிநிதி திரு ந. சிவபாதம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இ. க. உ. சிக்கனக் கடன் சங்கத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர்.

(அ-162)

### யாழ். செயலக ஊழியரின்

## சம்பள உயர்வு கொடுப்பனவு இம்மாதம் முதல் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப் 15

வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வை யாழ். செயலக ஊழியர்கள் இம்மாதம் பெறவிருக்கின்றனர்.

சம்பள உயர்வு தொடர்பான வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருகிறது என்றும் —

கடந்த மாத நிலுவையும் சேர்த்து இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்படும் என்றும் — செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பள உயர்வு தொடர்பாக வெளியாகியுள்ள சுற்றறிக்கையில் உள்ள முரண்பாடுகள் கொழும்பில் இருந்து சுற்றறிக்கை கிடைத்த பின்னர் சரிசெய்யப்பட்டு மிகுதிப் பணம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ 3)


எமது மாணவரின் அறிவுத் தேடலை வளர்க்கும் நோக்குடன்

**யாழ். பாரதி இளைஞர் அறிவியற் கழகக் கல்விப்பிரிவு**

நடத்திய

**மாபெரும் பொது அறிவுப்போட்டி இல. 1இன் முடிவுகள்**

முதலாம் இடம்: செல்வி க. சுபாஜினி
யா/கன்னியர் மடம் மகா வித்தி. — ஆண்டு 10

இரண்டாம் இடம்: செல்வி K. கிரிஷாந்தி
திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலப் பாடசாலை — ஆண்டு 11

மூன்றாம் இடம்: செல்வன் தி. பார்த்திபன்
ஹாட்லிக் கல்லூரி — ஆண்டு 10

**ஆறுதல் பரிசுகள்**

★ செல்வன் ந. மஞ்சுதன்
சா இந்துக்கல்லூரி ஆண்டு — 11

★ செல்வி ம. ஷைலானி
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை — ஆண்டு 6

★ செல்வி ம. சுபாஷினி
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை — ஆண்டு 8

★ செல்வி ஆ. சியாமினி
சென். சாள்ஸ் மகா வித்தி. — ஆண்டு 11

★ செல்வி அ. நொயலின் ஷாமினி
திருக்குடும்பக் கன்னியர் மடம் — ஆண்டு 10

★ செல்வி A. S. G. ஜெறல்டீன்
கன்னியர் மடம் மகா வித்தி — ஆண்டு 11

★ செல்வன் நா. செல்வச்சந்திரன்
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி — ஆண்டு 9

● இப்போது அறிவுப் போட்டிக்கு நடு நிலைமை வகித்த யாழ். கொத்தணி அதிபர் திருமதி பி. எவ் சின்னத்துரை அவர்களின் தலைமையிலான ஆசிரியர் குழுவிற்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

※ பரிசுகள் மிக விரைவில் வழங்கப்படும்

"அறிவியலில் ஐக்கியம், சகோதரத்துவம்"

கல்விப் பிரிவு,
**பாரதி இளைஞர் அறிவியற் கழகம்**
"BE YOUTH" LEAGUE
31/1A, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(24441)


## பயணிகளிடம் கைவரிசை!

தென்மராட்சி, பெப் 15

பூநகரி நல்லூர்ப்பகுதியில் யாழ்ப்பாணம் வரத் தரித்து நிற்கும் பயணிகளிடம் இருந்து பெருந்தொகை பணம், நகைகள் மற்றும் பொருள்கள் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு தங்கி நின்ற சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளில் பலர் தமது உடமைகளைப் பறிகொடுத்த நிலையில் சாப்பிடக் கூடப் பணம் இன்றித் தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

(த 117)

## மகளிர் தின நிகழ்ச்சி

கொக்குவில், பெப். 15

மகளிர் தினமான மார்ச் 8ஆம் திகதி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் கலை நிகழ்ச்சிகளும், "பெண்களாலா, ஆண்களாலா விடுதலை பெற்றுத்தர முடியும்" என்னும் தலைப்பில் பட்டிமண்டபமும் நடத்தப்படவுள்ளன.

(த-69)

## கிராம சேவகருக்கு சம்பள உயர்வு

கொழும்பு, பெப். 15

இலங்கை முழுவதும் உள்ள கிராம சேவையாளர்களுக்கு இவ்வருட மத்தியில் பதவி உயர்வும், சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(த)

## ப. நோ. கூ. ச. கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப் 15

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க மருதங்கேணிக் கிளையின் கலந்துரையாடல் ஒன்று, எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30மணிக்கு அம்பன் அ. மி. பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு சி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல், தட்டுப்பாடான நிலையில் உணவுப் பங்கீடு முதலிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படும்.

([illegible])


**இளங்கலைஞர் மன்றத்தின் 13ஆவது இசை விழா**

இடம்: மன்றக் கலா மண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

7ஆம் நாள் **15-02-93** திங்கள்

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

மாலை 4-00 — 5-00 மங்கள இசை
நாதஸ்வரம்; கோ. முத்துலட்சுமி, சு. தையல்நாயகி
தவில்: ரி. யுகராணி, உ. செல்வநாயகி

5-00 — 5-20 பாட்டு
எஸ். திலகவதி, ஜே. அமுதா, எஸ். பவதாரினி, ஆர். மைத்திரி, ஆர் காயத்திரி,
வயலின்: — ரி. ரேணுகா
மிருதங்கம் — பி. ரதிரூபன்

5-20 — 5-40 வீணையிசை
என். நளாயினி, என். ஜெயந்தினி, ஜே ஜெகன்மோகினி, ஆர் ரூபிணி,
மிருதங்கம்: — ரி திருக்குமரன்

5 4) — 6-00 வயலினிசை
கவிதா, வை. பாரதி, கனிஷியா, பி. சுபத்திரா, ரனித்தா,
மிருதங்கம்: — பி. ரதிரூபன்

6-00 — 6-45 பாட்டு - பிரசாந்தி ராமச்சந்திரன்
வயலின்: — ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம் — கே. கண்ணதாஸன்

6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்
செல்வி த. பேரம்பலம்,
(முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ. சங்கம்)
திருமதி மரகதவல்லி சிவலிங்கம்
திருமதி கலைவாணி சந்திரபோஸ்

தலைவர்: திருமதி ரி. சிதம்பரநாதன், இசை விரிவுரையாளர், கோப்பாய்-ஆசிரிய கலாசாலை)
சிறப்பு விருந்தினர்: செல்வி புஷ்பா செல்வநாயகம்

7-00 — 8-00 இசைக் கச்சேரி
வீணை: — நந்தினி விஜயரட்ணம்,
மிருதங்கம்: — எஸ். மகேந்திரன்
கடம்: — கண்ணதாசன்

8-00 — 9-15 கலைவாணர் கலையரங்கம் அளிக்கும்
"சத்தியவான் சாவித்திரி" புராண நாடகம்

வாழ்த்துபவர்:

**ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்,**
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-4505)



**நன்றிகள்**

நாடகமாமணி
**கந்தையா கனகையா**
(நிறுவனர், சுண்டிகுளி யாழ் நாடகக் கலாமன்றம்)

எமது குடும்பத் தலைவர் நோயுற்று இருந்த போதும், அவரின் இறுதி நிகழ்வின்போதும், எம் ஆறாத்துயரில் பங்கு கொண்ட பின்வருவோருக்கு எமது இதய பூர்வமான நன்றிகள்.

கலைஞரைக் காப்பாற்ற இரவு பகலாக இன்முகத்துடன் சேவையாற்றிய யாழ். போதனா வைத்தியசாலை விடுதி 8, 10 ஆகியவற்றைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் ஆண், பெண் தாதிகள், சிற்றூழியர்கள்.

இறுதி நிகழ்வின்போது நேரடியாக வருகை தந்தும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியும், எமது துயரில் இரண்டறக் கலந்த கல்லூரிகள் அரசாங்க தனியார் நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், நாடகமன்றங்கள், கழகங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், இரங்கலுரை நிகழ்த்திய பெரியார்கள், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர், மேலும் பல வழிகளிலும் உதவி நல்கியோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்

துரித கதியில் சேவையாற்றிய யாழ் "ஈசன்ஸ்" நிறுவனம்.

தனித்தனி நன்றி செலுத்த முடியாமைக்கு வருந்துகின்றோம்.

– குடும்பத்தினர்.

64. (136). கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(24442)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

பேக்கரி வேலைக்கு ஆட்கள் தேவை. பிஸ்கட் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது நேரில் வரவும். நியூ துர்க்கா பேக்கரி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி. (24427)

### விற்பனைக்கு

அலுமாரி, இரண்டு லாச்சி மேசைகள், மேசை, சாப்பாட்டு மேசை, சோக்கேஸ், ஸ்ரூல், லுமாலா சைக்கிள், சொப்பர் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. முக்கிய குறிப்பு: 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் மட்டும் பார்வையிட்டுப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (24428)

### காணி விற்பனைக்கு

நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியில் ஒவ்வொன்றும் மூன்று பரப்புகள் கொண்ட இரண்டு காணிகள் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ள வேண்டியவர்: அ செல்லத்துரை, பூதராயர் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (24445)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR**
By
**BRITTO**

வியா. - வெள்ளி

ஆரம்பம்:
**16-02-93**
8-00 மணி

(சி/4242)

## நன்றி நவிலல்

### நடராசா சிறீவிமலானந்தன்

(டச் றோட் - சித்தன்கேணி)

எமது அன்புச் சகோதரரின் பிரிவுத் துயர் கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவருக்கும், 10 02-1993 இல் எமது இல்லத்தில் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி, சகல உதவிகளும் புரிந்தோருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி
சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்.

தேவாலய வீதி,
சுங்கானை. (24444)

## 45 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம்: 01 — 01 — 1943

மறைவு: 02 — 01 — 1993

### அமரர் சின்னையா கனகசபை

(லிகிதர், மக்கள் வங்கி, பருத்தித்துறை)

02-01-93 இல் கிளாலியில் அகாலமரணமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவின் போது, உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள் உரியதாகுக.

இன்று 15-02-93இல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது 45 ஆம் நாள் நினைவு நாளிலும் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.
உறவினர்கள், நண்பர்கள்,

கிராமக் கோட்டடி,
மருதங்கேணி றோட்,
புலோலி கிழக்கு. (24420)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி எலிசபெத் ஜெயராணி விஜயதாசன்
திருமதி ஜொய்ஸ் அதிசயராணி தவராசா

அநியாய அழிப்பு: 15 - 02 - 1989

அமைதி காக்க வந்த இந்தியப்படை எமது இரு கண்களாகிய அன்புச் சகோதரிகள் இருவரையும் அநியாயமாய் அழித்தார்கள். அவர்கள் பிரிவால் ஆறாத் துயருறும்;

கணவன்மார், பிள்ளைகள், சகோதரர்,
குடும்பங்கள், உறவினர்கள்.

யாழ். வீதி,
உடுப்பிட்டி. (24373)

## ஓராண்டு நினைவஞ்சலி 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
**கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)
அன்னையின் மடியில்: 24 - 09 - 1918
ஆண்டவன் அடியில்: 27 - 02 - 1992
ஆண்டுத் திதி: 15 - 02 - 1993

அமரர்
**தாமோதரம்பிள்ளை நந்தகுமார்**
(பல்கலைக்கழக மாணவன், மொறட்டுவ)
அன்னையின் மடியில்: 01 - 05 - 1960
ஆண்டவன் அடியில்: 28 - 04 - 1986
ஆண்டுத் திதி: 10 - 05 - 1993

மன்றாடி நின்றோம் மாயவன் தாளை, வன் விதி கொடிதென வந்த காலன் - தம்பியைக் கொண்டு சென்றனன்; கொழுந்தைப் பறித்தனன்! அன்புமைந்தனாம் நந்தகுமார் நாமம்; மங்கியதென்றே மருளுற்ற தந்தையவர், தாங்கொணாத் துயரினில் தனயனைத் தேடி மூவிரு ஆண்டு முடிவுறும் போது, நந்தன் நிழல்தேடி நீரும் சென்று, இன்று ஓராண்டு ஆனதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவினைத் தாங்க முடியாது துயருறும்:

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

அம்மா, அக்கா, அத்தான்,
மருமக்கள், உறவினர்கள்.

கண்டி வீதி, கொடிகாமம்.

## 6ஆம் ஆண்டு நினைவலை



### இருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

அன்னை மடியில்: 30 — 12 — 1963

ஆண்டவன் அடியில்: 22 — 02 — 1987

திதி:- 15 — 02 — 1993

உன் அபிநயத்துடன் கூடிய நடனத்தைக் கண்டு களித்த கண்கள் மீண்டும் உன் நடனத்தைக் காணத் தவிக்கின்றன!

அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம.

அப்பா, அம்மா,
சகோதரங்கள்.

(24406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உடனடியாகத் தேவை

தமிழர்களின் தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில், எமது தேசிய நலன் பேணப்படும் வகையில், கல்விச் சீர்திருத்தம் இடம்பெறவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன். அவரது இந்த யோசனை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதும், உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒன்றுமாகும்.

ஆங்கிலேயர்கள் தமது காலனித்துவ நலன்களைப் பேணுவதற்காக அறிமுகப்படுத்திய கல்வி முறையின் எச்ச சொச்சங்களே இப்போது நடைமுறையில் உள்ள கல்வித் திட்டங்களில் பெரும் பகுதியாகும். அவற்றோடு, சிங்களப் பேரினவாதிகளின் கருத்தாதிக்கத்தை திணிக்கும் திட்டங்களும் சேர்க்கப்பட்டு, தமிழர்களின் தேசிய நலன்களையும், தேவைகளையும் முற்றாகப் புறக்கணிக்கும் ஒரு கல்வி முறையே இப்போது தமிழ்ப் பகுதிகளில் செயற்படுத்தப்படுகிறது.

சுதந்திரத்துக்காகப் போராடும் நாம், எங்கள் எதிர்கால வாழ்வுக்கு எதனை நம்பியிருக்கிறோம்? எங்கள் தாயகத்தின் — தேசத்தின் — வளங்களும் எமது மக்களின் மனித வளங்களுமே — எங்களின் — எங்கள் பிள்ளைகளின் — எதிர்கால வாழ்வும், வளமும், சீரும் சிறப்புமாகும்.

அதன் பொருட்டு எங்கள் தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தி உலகின் ஏனைய பகுதி மக்களோடு முன்னின்று வாழ்க்கை நடத்துவதற்கு இப்போதாவது அத்திவாரம் இடுதல் இன்றியமையாதது. அந்த நீண்ட நோக்கும், தீர்க்கதரிசனமும் எமது கல்விமான்களிடமும், கல்வித்துறை நிர்வாகிகளிடமும் இல்லையேல் அவர்கள் தமது சமூகக் கடமையிலிருந்து தவறியவர்களாகிவிடுவர். சமூக உணர்வு இல்லாத புத்திசீவிகள் வெறும் உத்தியோகப் படிப்பாளிகளே!

தனித்துவமான பொருளாதார சுதந்திரத்துக்கு, தனித்துவமான கல்வி முறை வேண்டும் என்ற துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் கருத்தும், இங்கே ஊன்றி உன்னிப்பாக நோக்கற்படுதல் பொருத்தம்.

தமிழர்கள் எழுச்சி பெற்ற இனமாக, விழிப்புணர்வு கொண்ட சமூகமாக விளங்குவதற்கு; கல்வியே மூலாதாரமானது. ஆகையால் போராட்ட காலமான இப்போதும் சரி, விடுதலை பெற்ற இனமாக மாறிய பின்னரும் சரி அவர்கள் கல்வியைப் புறககணிக்க முடியாது.

ஆகவே அவர்களின் சகல துறைகளிலுமான வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் உதவும் புதிய கல்விமுறை உடனடியாகத் தேவைப்படுகிறது. எங்கள் தேசத்து வளங்களைத் தக்கவாறு பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சிகண்டால் மட்டுமே, அரசியல் சுதந்திரமும் ஏனைய சமூக மேம்பாடுகளும் சாத்தியமாகும்.

அத்தோடு, எமது தேசிய இனத்தனித்துவத்தை, மகத்துவத்தை, பெருமையை, சிறப்பை மாணவர் மனதில் பதிக்கவும், அவற்றை அவர்கள் பேணி மேலோங்கச் செய்யத் தூண்டவும் வழிகாட்டும் கல்விச் சீர் திருத்தம் தேவைப்படுகிறது.

நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஈடுகொடுத்து எமது தேசிய பொருளாதார வர்த்தக நலன்களை மேம்படுத்தும் அதேவேளை —

எங்கள் எதிர்காலப் பிரசைகளின் வாழ்க்கை வசதிகளையும் வளங்களையும் சிறப்பிக்க வகை செய்யும் விதத்திலும் புதிய கல்விச் சீர் திருத்தம் உருவாக்கப்பட வேண்டும்

இதன் பொருட்டு தமிழரின் தேசிய நலனில் அக்கறை கொண்ட சகலரினதும் கருத்துக்களை ஒன்று குவிப்பது முதலாவது பணியாக அமையட்டும்.

---

## இன்று

யாழ்ப்பாணம், பெப். 15

சாரண இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் தினத்தை முன்னிட்டு இலங்கை சாரணர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளையினர் சாரணர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

சாரண. குருளைச் சாரண தலைவர்களும், ஆசிரியர்களும், திரிசாரணர்களும் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (உ-5)

o o o

மயிலணி, பெப். 15

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஓ-89)

## மலசலகூடம் அமைப்பு

அரியாலை, பெப். 15

யாழ். நகர மின்சார நிலைய வீதியில் ஏழு பொது மலசல கூடங்களை அமைப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் யாழ். மாநகரசபை துரித கதியில் ஈடுபட்டு வருகின்றது.

மின்சார நிலைய வீதியில் உள்ள ஏழுகடைகள் இதற்கென மாநகரசபை ஊழியர்களால் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த பொது மலசல கூடங்களை அமைப்பதற்கென மாநகரசபையின் அபிவிருத்தித் திட்ட நிதியில் இருந்து மூன்று லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

மலசல கூடங்கள் பொது மக்களின் பாவனைக்காக ஏப்ரல் மாத நடுப்பகுதியில் திறந்து விடப்படும் என்றும் அவர் சொன்னார். (த-17)

---

### கடற்படைக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்துக்கு முன் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு கடற்படையில் சேர்க்கப்படும் என்றும்—

கடற் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் இவை முக்கிய பங்கை வகிக்கும் எனவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஸ்ரீலங்கா கடற்படையினர் இஸ்ரேலிய, மற்றும் தென் கொரிய படகுகளையே தமது தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். (உ-5)

---

### தமிழக காங்கிரஸ்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் பிரதமர் ராவிடம் தெளிவுபடுத்துவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் —

தமிழகத்தில் காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணி உறவுகள் சீரற்ற நிலையை அடைந்ததை அடுத்து நரசிம்மராவின் விசேட தூதுவர்களாக தமிழகம் வந்திருந்த மோதிலால் வோராவும், கே. வி. தங்கபாலுவும் புதுடில்லி திரும்பினர். புதுடில்லி வந்து சேர்ந்த கையோடு —

தங்களின் ''தமிழக பயண அறிக்கையை', பிரதமர் நரசிம்மராவிடம் அவர்கள் கையளித்தனர். (ஒ - த -5

---

### பொது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

சட்டத்துக்குப் புறம்பான விதத்தில் அரசு ஆட்களைக் கைது செய்து சித்திரவதைப் படுத்துதல் போன்றவை குறித்து மக்களின் பொதுவான எண்ணத்தை அறிவதற்கு தேர்தல் பிரசார மேடைகளே தகுந்த இடம் என்றும்— திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். (த-எ)

---

எமது பொருளாதார சுதந்திரத்திற்கு

# தனித்துவமான கல்வி முறை ஏற்படுத்தப்பட வேண்டும்

## பாராட்டு நிகழ்ச்சியில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், பெப். 15

தனித்துவமான எமது பொருளாதார சுதந்திரத்திற்கு, தனித்துவமான ஒரு கல்வி முறை ஏற்படுத்தப்பட வேண்டும். தொழில் நுட்பம் சார்ந்த துறைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அ. துரைராஜா.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்திய தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புத் தகைமை பெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

இலங்கையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இலவசக் கல்வியைப் பெறுகின்றனர். ஆனால் உயர் கல்வியைப் பொறுத்த வரை நாட்டில் உள்ள 8 பல்கலைக்கழகங்களில் ஏறக்குறைய 9 ஆயிரம் மாணவர்களுக்கே ஓராண்டில் அனுமதிகிடைக்கிறது.

ஒரு வருடத்தில் ஆண்டு ஒன்றில் சேரும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் இரண்டு சத வீதத்தினர் மட்டுமே அதே ஆண்டில் பல்கலைக்கழகத்துக்குச் செல்கிறார்கள்.

ஆனால் எல்லா மாணவர்களுக்குமே பல்கலைக்கழகம் செல்லும் நோக்கத்துடனேயே கல்வி போதிக்கப்படுகிறது. பெற்றோர்களும அந்த நோக்கத்தை அடைவதையே விரும்புகிறார்கள்.

இந்த நிலைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியம்.

எமது பிரதேசத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு, மனித வளங்களை அபிவிருத்தி செய்வது அவசியம். அத்தகைய மனித வளங்களின் அபிவிருத்திக்கு கல்வியே அவசியம்

500 ஆண்டுகளுக்கு மேல் அந்நியரால் எமது இனம் ஆளப்படும் இனமாக இருந்து வந்ததால்— ஆளப்படும் ஓர் இனம் என்ற உணர்வுடனேயே எமது மாணவர்கள் இருக்கிறார்கள் இதற்கு மாறாக தாம் ஆளும் இனம் என்ற உணர்வுடன் சிங்கள மாணவர்கள் தமது வரலாற்றைப் படிக்கிறார்கள். எனவே எமது வரலாறு சரியான முறையில் தெரியப்படுத்தப்படல் அவசியம் என்றார்.

**கல்விப்பணிப்பாளர்**

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு ஆர் சுந்தரலிங்கம் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது;

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அற்புதமான செயற்பாடுகள் சோர்வுற்ற கல்விச் செயற்பாடுகளுக்குத் துணைபுரிந்து வருகின்றன.

எமது மாவட்டத்தின் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க 600 தரமான ஆசிரியர்களை அவர்கள் தந்துள்ளனர். மிகக்குறுகிய காலத்தில் மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு அவசியமான விளையாட்டுத்துறையை மேம்படுத்தி மாணவர் உலகத்தை ஊக்குவித்துள்ளனர்.

பரீட்சைகள் தடைப்படுவதால் மனம் குன்றிய மாணவர்களின் நிலைமையை சிந்தித்து முன்னோடிப் பரீட்சையை நடத்தி முடித்துள்ளனர்.

போராட ஓர் இனம் சுகபோகங்களை அனுபவிக்க ஓர் இனம் என்ற நிலை இன்றி இடைவெளியை கல்வியால் இணைத்து செயற்படுவோம்.

இன்றைய நிகழ்ச்சிக்கு எமது தேசியத் தலைவர் அனுப்பிய செய்தி எமக்கு உற்சாகத்தையும், மனப்பூரிப்பையும் ஏற்படுத்தியுள்ளன — என்றார். (த-5)

---

# அரச அடமான வங்கியும் பாதுகாப்பு வரி அறவீடு!

அரச அடமான, முதலீட்டு வங்கி வழங்கியுள்ள கடன்களுக்கான வட்டியில் மூன்று சத வீதத்தை பாதுகாப்பு வரியாக வங்கி வசூலிக்கும்.

இந்த நடைமுறை கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளதாக வங்கியின் பொது முகாமையாளர் டி பி. ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடனைப் பெற்றவர்களே வட்டியில் இருந்து இப் பாதுகாப்பு வரியை வழங்குவர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தக வங்கிகளின் செயல்பாடுகளுடன் ஒத்துப்போகக் கூடியதாக அரச அடமான மற்றும் முதலீட்டு வங்கியின் கடனைத் திரும்பப்பெறும் நடைமுறை மீளாய்வு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (த-எ)

---

# இலங்கையில் அமைதி ஏற்பட கனேடிய அரசு உதவும்!

## மட்டக்களப்பில் தூதர் உரை

இலங்கையில் அமைதியும் சமாதானமும் ஏற்பட உதவ வேண்டும் என்ற மனோ நிலையிலேயே கனேடிய அரசும் மக்களும் உள்ளனர்.

— இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான கனேடியத் தூதர் பேர்னாட் பிளான்ஸ்.

அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர், அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே இப்படிக் கூறினார்.

''இலங்கையின் சூழல் வரலாறு பின்னணி ஆகியவற்றுக்கு அமைய இலங்கைக்கு என்று ஒரு தீர்வு எட்டப்பட்டாலேயே உண்மையான அமைதியும், சமாதானமும் ஏற்படும்'' — என்றும் அங்கு கூறினார்.

மட்டக்களப்பில் வாழைச்சேனை, கல்குடா, செங்கலடி, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்தார். (உ-5)

---

# நாகலாந்து, மேகாலயா மாநிலத் தேர்தல்கள் இன்று

லண்டன், பெப். 15

இந்தியாவின் நாகலாந்து, மேகாலயா மாநிலங்களுக்கான இடைத் தேர்தல்கள்— பலத்த பாதுகாப்பின் மத்தியில் — இன்று நடைபெறவுள்ளன.

நாகாலந்தில் கடந்த ஏப்பிரலில் மாநில அரசு கலைக்கப்படும்வரை ஆட்சியில் இருந்த நாகலாந்து மக்கள் சபையின் கடும் போட்டியை எதிர்கொள்ளும் நிலையில் காங்கிரஸ் கட்சி இருப்பதாகவும் -

மேகாலயா மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி அங்கு உருவாகியுள்ள மூன்று மாநிலக் கட்சிகளின் கூட்டு அமைப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

அயோத்தி விவகாரத்தைத் தொடர்ந்து பலத்த விமர்சனத்துக்குள்ளாகியிருக்கும் பிரதமர் நரசிம்மராவ் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை உரைத்துப் பார்க்கும் ஒரு தேர்தலாக இது அமையும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-5)

---

# ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் சீருடை அணிய வேண்டும்

## பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ் ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் அனைவரும் கடமை நேரத்தில் சீருடையுடனேயே காணப்பட வேண்டும் என்று பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

சிற்றூழியர்களை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ள இது உதவும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது சிற்றூழியர்களில் பலர் சீருடையின்றியே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் எடுத்துக் காட்டப்படுகிறது

இதேவேளை, சிற்றூழியர்கள் சிலருக்கு ஒழுங்கான முறையில் சீருடைகள் கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்படவில்லை என்றும், சிற்றூழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-17)

---

# தொலைக்கல்வி ஆசிரியர் நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப். 15

தொலைக்கல்வி போதனாசிரியர் பதவி நியமனத்துக்காக விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருக்கின்றன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர், தமது நிலையங்களுக்கு என ஒதுக்கப்பட்ட நேரத்தில் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு சமுகம் தருமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். ஒவ்வொரு நிலையத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நேரங்கள் வருமாறு:

**நாளை**

காலை —

- 8.30 - சாவகச்சேரி
- 9 30 - கரவெட்டி
- 10.00 - பருத்தித்துறை
- 11 00 - வட்டுக்கோட்டை

பிற்பகல் —

- 1.00 - கோப்பாய்
- 2.00 - தெல்லிப்பளை
- 3.00 - மருதனார்மடம்
- 4 00 - வேலணை

**நாளை மறுதினம்**

பிற்பகல் —

- 2 30 - யாழ்ப்பாணம்
- 3.30 - நல்லூர்
- 4.00 - ஆங்கிலம்

(பொது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் அரசலிங்கம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் அரசலிங்கம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தனேஸ்வரியின் அன்புக் கணவரும், அம்பிகாதேவி, அம்பிகைராசா, அருள்வதனி, அமுதவதனி, அருட்சோதி, அருந்தவநீசன், சிவகுமார், வான்மதி, சிவகுமாரி, காலஞ்சென்ற தேவராசா ஆகியோரின் தந்தையும், புருசோத்தமன், நாகேஸ்வரி, கந்தசாமி, அமிர்தானந்தன், கலாதேவி, மகேந்திரம் ஆகியோரின் மாமனாரும், ராசலிங்கம், பஞ்சலிங்கம், திருமதி கனகசுந்தரம், திருமதி அமுதலிங்கம் ஆகியோரின் சகோதரரும், திருமதி நவமணி செல்லையா, திருமதி தனலக்ஷ்மி பீற்றர், திருமதி வள்ளியம்மை பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (15 - 02 - 1993) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்

தகவல்:
அ. அருந்தவநீசன்
அ. சிவகுமார்

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.
(24448)

## மயில்வாகனம் பரமானந்தம்

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மயில்வாகனம் பரமானந்தம் (ஓய்வுபெற்ற மிருக வைத்திய திணைக்கள சாரதி) 14 - 02 93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி பரமானந்தம் இராசம்மாவின் அன்புக் கணவரும், சுதர்சன் (ஜேர்மனி), சுமதி, சுதர்சினி, சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி கண்மணி தாமோதரம்பிள்ளை (ஆசிரியை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி), திருமதி இராசமணி, செல்லத்துரை, பரமநாதன் (கல்வித் திணைக்களம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலநாதன், பாலகுமார், கருணாவதி ஆகியோரின் மாமனாரும், சிவதர்சன், பாலசுதன், ஐதர்சன், சஞ்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15 - 02 - 93 காலை 10.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு.
புத்தூர்.
(24452)

தகவல்:
பிள்ளைகள்

## திருமதி நாகரட்னம் சுப்பிரமணியம்

66, மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி நாகரட்னம் சுப்பிரமணியம் நேற்றுக் காலமானார்.

இவர் காலம் சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், அருட்செல்வி (றோகினி) (வர்த்தகத் திணைக்களம், யாழ்ப்பாணம்), அனுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு ப. சேகர் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை) அவர்களின் அன்பு மாமியும், ஜனனியின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-02-93) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுக்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ப. சேகர்
(மருமகன்)

66, மணல்தறை ஒழுங்கை,
திருநெல்வேலி.
(24447)

## திருமதி
## திரேசாவயலற் (பவளம்) யோண்பிள்ளை

அச்சுவேலி தொழில்பேட்டை வீதியைச் சேர்ந்த திருமதி திரேசாவயலற் (பவளம்) யோண்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை யோண்பிள்ளையின் (துரைமணி) (முன்னாள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், மரியதாசன் (பிரான்ஸ்), மேரிஅன்ரநீற்ரா (மனோ), மேரிஅனற்ரா (புனிதம்) (லண்டன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருட்பிரகாசம் (அச்சுவேலி மேற்கு கி. உ. கு. செயலாளர்) பாலேந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஏரிண்டன்பிரதீஸ், ஏரிண்டன்லதீஸ், ஏரிண்டன்டினேஸ், ரூஷாந்திமேரி, யுஸ்ரீனா ஜான்ஷி ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்றவர்களான செங்லப்பா (இராயப்பு) இன்னேசு தம்பதியரின் அன்பு மகளும், நீற்ராவயலற காலஞ்சென்றவர்களான ஹென்றியோசேப் (முன்னாள் இந்திய ராணுவம்), சின்னத்துரை, செல்வராசா, அரியராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற T. M. யோசேப்பு, இன்னேசம் செல்வம், பிரகாசியம்மா ஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு புனித சூசையப்பர் தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனிதசூசையப்பர் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
பி. அருட்பிரகாசம்
(மருமகன்)

தொழில்பேட்டை வீதி,
அச்சுவேலி.
(24451)

## ஓவியப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ். கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படும் அனைத்து ஆசிரியர்களுக்கான ஆக்க ஓவியப்போட்டி - 199. எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 1மணிவரை பல்வேறு நிலையங்களில் நடைபெறும்.

வேலணைக் கோட்டப் போட்டி சென். ஜோன்ஸ் அக்கடமியிலும், யாழ்ப்பாணக் கோட்டப் போட்டி யாழ். இந்துக் கல்லூரியிலும், சாவகச்சேரிக் கோட்டப் போட்டி சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்திலும், பருத்தித்துறைக் கோட்டப் போட்டி வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், மருதனார்மடக் கோட்டப்போட்டி இராமநாதன் கல்லூரியிலும், பண்டத்தரிப்புக் கோட்டப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் இடம்பெறும்.

## கிளாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

64), பஸ்தியாம்பிள்ளை ராசநாயகம் (வயது 64), அவரது மனைவியான இராசநாயகம் திரேசம்மா (வயது 63) ஆகிய நால்வருமே ஷெல் தாக்குதலில் காயமடைந்தவர்கள் ஆவர். (ஒ-5)

## சிவராத்திரி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ குடாநாட்டுக்கான போக்குவரத்துத் தடை காரணமாக கடந்த பல மாதங்களாக உணவு விநியோகம் சீர்குலைந்திருப்பதால் உடனடியாகப் போதிய உணவுப் பொருள்களை அனுப்பி 4 வாரங்களுக்கு குடாநாட்டில் உள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் அவசர இலவச உணவு விநியோகத்தை மேற்கொண்டு மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் இப்பேரவை கேட்டுக் கொள்கின்றது.

★ யாழ்ப்பாணக் கடலேரியில் இடம்பெற்ற கிளாலிப் படுகொலைகளைப் பேரவை வன்மையாகக் கண்டிப்பதுடன் குடாநாட்டுக்கான போக்குவரத்து பொருளாதாரத்தடைகளை நீக்கி பொதுமக்கள் சுதந்திரமாகப் பிரயாணம் செய்வதையும் மக்களின் உயிர் வாழ்வதற்கான சட்டரீதியான சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் இப் பேரவை கோருகின்றது.

★ திருகோணமலையில் இந்துக் கோவில்களுக்குச் சொந்தமான காணிகளை அரசாங்கம் பறிமுதல் செய்து குடியேற்றங்களை நிறுவுவதை இப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது இலங்கை அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள மத சுதந்திரத்தையும் உரிமையையும் பறிக்கும் இவ் அத்துமீறலை உடனடியாகக் கைவிடும்படி இப் பேரவை கேட்டுக்கொள்கின்றது. (அ)

# ஆயுதக்குழுக்கள் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரிப்பு!

## மத்திய இணை அமைச்சர் கவலை

சென்னை, பெப். 15

தமிழ்நாட்டில் அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம மாநிலத்தில் அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றன.

மத்திய இணை அமைச்சர் எம். அருணாசலம் சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் இவ்வாறு கவலை வெளியிட்டார்.

மாநில அரசு இதனை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இதற்காக மத்திய அரசின் உதவியை மாநில அரசு நாடலாம் என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

# யாழ். வைத்தியசாலையில் தாதிகள் பற்றாக்குறை

அரியாலை, பெப் 15

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிமார்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதாக அறிய வருகின்றது. வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் 'ஏ' 'பி' தரத்தில் 16 சதவீதமான தாதிமார்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. இது தொடர்பாக சுகாதார மகளிர் விவகார அமைச்சுக்கு அறிவித்தும் எவ்வித பயனும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

வைத்தியசாலையில் பரிசாரகர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாகவும், பற்றாக்குறையைப் போக்க வைத்தியசாலையின் ஆண் சிற்றூழியர்களில் 25 பேர் பரிசாரகர்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளனர் என்றும்—

வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தரத்தில் 50 வீதம் பற்றாக்குறை நிலவி வருதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்

## நிவாரணம் தருக!

''யாழ். செயலக ஊழியர்களுக்கு 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கஷ்ட நிவாரணப்படி வழங்க வேண்டும்.

இப்படியான கோரிக்கையை யாழ். செயலக நலன்புரிச் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருள்கள் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகள் விஷம் போல உயர்ந்துள்ளதால், தாம் பெரும் கஷ்டநிலையில் உள்ளதாகவும்—

அதனைச் சமாளிக்க தமக்கு கஷ்டநிவாரணப்படி வழங்க வேண்டும் என்றும்— ஜனாதிபதியிடம் அச் சங்கம் கோரியுள்ளது (த-3)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கிருஷ்ணன்

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த சின்னத்தம்பி கிருஷ்ணன் நேற்று வண்ணார்பண்ணையில் காலமானார். அன்னார் சி. நகுலேஸ்வரியின் அன்பு கணவனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - மதியாபரணம் தம்பதிகளின் அன்பு மகனும், புஷ்பலதா, வசந்தகுமார் (யாழ். இந்து மாணவன்), புஷ்பமாலா (வேம்படி மகளிர் மாணவி), மகிந்தகுமார் (போராளி சுடர்மணி அல்லது கிர்மானி), சுரேஸ்குமார் (யாழ். இந்து மாணவன்), மோகனகுமார் (யாழ். இந்து மாணவன்), புஷ்பலீலா (யாழ். இந்து மகளிர் மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம், கனகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், மகாதேவன், காலஞ்சென்ற வைத்தீஸ்வரன், இராஜ இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகம்மா, நல்லம்மா, தவநாயகி, கருணைநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-02-93) நண்பகல் 1மணிக்கு இல. 28 துரைராசா வீதி, வண்ணார்பண்ணை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

28, துரைராஜா வீதி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(24453)

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டியும்

# கேணல் கிட்டு

திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) அவர்களின் கிரியைகள் இன்று (15 02-93) காலை 8.30 மணியளவில் ஊறணி தீர்த்தக்கரையிலும், 10.30 மணியளவில் வேம்படி, வல்வெட்டித்துறை இல்லத்திலும் இடம்பெறும். மேற்படி கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

நன்றி

— குடும்பத்தினர்

வேம்படி,
வல்வெட்டித்துறை.
(24443)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org